23.01.2025

O.S.No.483 of 2022

PW1 திரு.கோபாலகிருஷ்ணன். (1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-

சாட்சி வா.த.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

பிரதிவாதிகள் என்னிடம் ரூ.1,65,000/- வட்டியாக கொடுத்ததைக் காட்டக்கூடிய ஆவணம் எதனையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் இரண்டு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியிருக்கின்றேன். அது வா.த.சா.ஆ.2 மற்றும் 3. நான் அனுப்பிய வா.த.சா.ஆ.3 அறிவிப்பில் ஏற்கனவே அனுப்பிய வா.த.சா.ஆ.2 அறிவிப்பில் தவறு ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கின்றேனா என்றால் சொல்லியிருக்கின்றேன். வா.த.சா.ஆ.3 அறிவிப்பை படித்து பார்த்து எந்த இடத்தில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது என்று கேட்ட பொழுது சாட்சி நான் வழக்கறிஞரிடம் கூறினேன் என்று கூறுகின்றார். 2ம் பிரதிவாதியிடம் நான் வட்டி வாங்கிய சமயத்தில் மாதம் ரூ.21 ஆயிரம் வீதத்தில் வாங்கினேனா என்றால் அப்படி வாங்கவில்லை. நான் வட்டி தொகையை பெரும்பாலும் 2ம் பிரதிவாதி பவுல்ராஜீடம் தான் வாங்கியிருக்கின்றேன் என்றால் சரிதான். நான் என்னுடைய பிராது பத்தி 3ல் அல்போன்ஸ்தான் என்னிடம் கடன் வாங்கியிருந்தார் என்று சொல்லியிருப்பது சரியா? இல்லையா? என்றால் அல்போன்ஸ் தான் என்னிடம் கடன் வாங்கினார். நான் என்னுடைய குறுக்கு விசாரணையின் பொழுது அல்போன்ஸ் மற்றும் அவரது பிள்ளைகள் சேர்ந்து என்னிடம் கடன் வாங்கினார்கள் என்று சொல்வது சரியா? அல்லது அல்போன்ஸ் மட்டும் என்னிடம் கடன் வாங்கினார் என்று சொல்வது சரியா? என்றால் அல்போன்ஸ் கடன் வாங்கினார். மற்றவர்கள் எல்லாம் சாட்சியாக உடன் இருந்தார்கள். 2ம் பிரதிவாதி கடன் வாங்கிய தேதியில் இருந்து 16.04.2021 வரை ரூ.11,19,000/-த்தை திருப்பி கொடுத்துவிட்டார் என்று சொன்னால்

அது தவறு. நான் 2ம் பிரதிவாதியிடம் இருந்து வங்கி பரிவர்த்தனை மூலம் பெற்ற தொகையை மட்டும் கணக்கில் காட்டிவிட்டு நேரடியாக கொடுத்த தொகைகளை கணக்கில் காட்டவில்லை என்றால் தவறு. ரொக்கமாகக் கொடுத்ததையும் கணக்கில் காட்டியிருக்கின்றேன். 2ம் பிரதிவாதி அல்போன்ஸ்க்கு நான் நேரடியாக எந்த கடனும் கொடுக்காததால் அவர் ஏற்படுத்திக்கொடுத்த அடமான கடன் பத்திரம் செல்லாது என்று சொன்னால் அது தவறு. இறந்து போன அல்போன்ஸ் என்னிடம் கடன் பெறாததால், 2ம் பிரதிவாதி தவிர மற்ற வாரிசுகளை இந்த அடமான பத்திரம் கட்டுப்படுத்தாது என்று சொன்னால் தவறு. 2ம் பிரதிவாதியை எனக்கு 10 ஆண்டுகளுக்கு மேலாகத் தெரியும். 2ம் பிரதிவாதிக்கு தினமும் மதுக்குடிக்கும் பழக்கம் இருக்கின்றது என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. அல்போன்ஸ் எனக்கு அடமான பத்திரத்தை எழுதி கொடுப்பதற்கு முன்பாகவே 3ம் தரப்பினருக்கு அடமான பத்திரத்தை எழுதிக்கொடுத்த விசயம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. **(அறிவார்ந்த வாதி தரப்பு வழக்கறிஞர் இந்த வினா வழக்கெழு வினா மற்றும் தொடர்புடைய சங்கதிக்கு அப்பாற்பட்டது என்றும், இது பற்றி எதிர்வழக்குரையில் சாட்டுதல் இல்லை என்று ஆட்சேபித்தார்**). இதனால் அல்போன்ஸ் எனக்கு ஏற்படுத்தி கொடுத்த அடமான பத்திரம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. ஒரே வழக்கு காரணத்திற்காக இரண்டு வழக்கறிஞர் அறிவிப்புகளை நான் அனுப்பி இருப்பதால் என்னுடைய வழக்கு அனுமதிக்க தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த அடமான பத்திரத்தில் சாட்சி கையொப்பம் இட்டுள்ள சாட்சிகளை நான் எனது தரப்பில் சாட்சிகளாக விசாரிக்கபோகின்றேனா என்பதை எனது வழக்கறிஞரிடம் தான் கேட்கவேண்டும். அடமான கடன் தொகையை விட அதிகமான தொகைகளை நான் ஏற்கனவே பெற்றுவிட்டபடியால் பிரதிவாதிகள் எனக்கு எந்த தொகையையும் திருப்பித் தர கடப்பாடுடையவர்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. ஆகவே இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை :- இல்லை.